

කාර්ය සාධන වාර්තාව
செயல் திறன் அறிக்கை
PERFORMANCE REPORT
2020





ශ්‍රී ලංකා දුම්රිය දෙපාර්තමේන්තුව
இலங்கை புகையிரத திணைக்களம்
SRI LANKA RAILWAY DEPARTMENT



செயல் திறன் அறிக்கை – 2020

இலங்கை புகையிரத திணைக்களம்

உள்ளடக்கம் பக்கம்

01.அத்தியாயம்– தாபன பகுதிZசெயற்பாட்டு சாரம்சம்

1.1 அறிமுகம் 1

1.2 தாபனத்தின் கூற்று , இலட்சியம், நோக்கு 3

1.3 பிரதான விடயங்கள் 4

1.4 அமைப்பு அட்டவணை 5

1.5 இலங்கை புகையிரத திணைக்களத்தின் பிரதான உப திணைக்கள பிரிவு, அலகு, கட்டமைப்பு 7

1.6 இலங்கை புகையிரத திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனம்Zநிதியம் 9

1.7 வெளிநாட்டு உதவி கிடைக்கும் கருத்திட்டங்களின் தகவல்கள் 9

02 அத்தியாயம் - முன்னேற்றமும் முன் நோக்கும் 10

விஷேட வெற்றி , சவால்களும் முன் நோக்கும்.

03. அத்தியாயம – வருடத்தின் மொத்த நிதி முன்றேற்றங்கள் 22

3.1 நிதி செயல் திறன் வெளிப்பாடு 22

3.2 நிதி நிலைமை பற்றிய வெளிப்பாடு 24

3.4 நிதி வெளிப்பாட்டு குறிப்பு 27

3.5 வருமாணம் சேகரிப்பு செயல் திறன் 27

3.6 ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு பயன்படுத்தல் செயல் திறன் 27

3.7 நி. பி 208ன் படி , வேறு அமைச்சுZதிணைக்கள பிரதிநிதிகளாக இத் திணைக்களத்திற்கு Zமாவட்ட செயலகத்திற்குZமாகான சபைக்குZ ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு 27

3.8 நிதி அல்லாத சொத்துக்கள் பற்றி அறிக்கையிடும் செயல் திறன் 28

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 28

04. அத்தியாயம் – செயல் திறன் காட்டி 29

4.1 நிறுவனத்தின் செயல் திறன் காட்டி(செயற்பாட்டு திட்டத்தை அடிப்படையாக கொண்டு) 29

05. அத்தியாயம் – நிலையான அபிவிருத்தி நோக்கத்தை (SGD) அடைந்து கொள்ளும் செயல் திறன் 30

5.1 கண்டறியப்பட்ட நிலையான அபிவிருத்தி நோக்கு 30

5.2 நிலையான அபிவிருத்தி இலக்கை வெற்றியடைதலும்Zசவால்களும். 31

6. அத்தியாயம் - மணித வள பகுதி 32

6.1 சேவையாளர் தொகை முகாமைத்துவம். 32

6.2 நிறுவனத்தின் செயல் திறன் கருதி மணித வள பற்றாக்குறையை அல்லது மேலதிகத்தை தாக்கும் விதம் 32

6.3 மணித வள அபிவிருத்தி 32

7. பிரிவு அனுகூல அறிக்கை 33

அத்தியாயம்

1.1 அறிமுகம்

இலங்கை போக்குவரத்தின் முன்னோடியான இலட்சியத்தை மேற் கொள்ளும் இலங்கை புகையிரத திணைக்களம் 1964 திசம்பர் 26ம் திகதி தனது முதலாவது வெள்ளோட்டத்தை ஆரம்பித்ததுடன் தனது இலட்சியப் போக்கை 157 வருட காலமாக வழங்கி வருகின்றது.

பிரதாள போக்குவரத்து வழங்குனராக இலங்கை புகையிரத சேவை 2020ம் வருடத்தில் பொருளாதார அபிவிருத்திற்காக பங்களிப்பை வழங்கிக் கொண்டு தனது சேவை நடவடிக்கைகளை தொடராக கொண்டு செல்கின்றது. 2020ம் வருடத்தில் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தில் தொடராக செயற்பட்டு சூழல் பற்றுள்ளதும் சிக்கனதான போக்குவரத்து வழி முறையாக தமது சேவை நடவடிக்கைகளை வினைத் திறனுடன் மேற் கொள்கின்றது.

இலங்கை புகையிரத திணைக்களம் அரசாங்கத்தின் பிரதான திணைக்களமாக போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் இயங்குகின்றது. இத் திணைக்களம் புகையிரத கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படுவதுடன் புகையிரத பொது முகாமையாளர் புகையிரத திணைக்களத்தின் பிரதானியாக செயற்படுகின்றார். இலங்கை புகையிரத திணைக்களத்தில் கிளை மற்றும் அலகுகள் 14ன் கீழ் நிருவாக நடவடிக்கைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன், உப திணைக்களத்தின் கிளை, அலகு பிரதானிகளுக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்களின் கீழ் நடவடிக்கை மேற் கொள்ளப்படுகின்றது.

நாட்டின் 25 மாவட்டங்களில் 21 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் பாதை கி.மீ 1478.52 அளவுள்ள தூரத்தை புகையிரத நிலையங்கள் 418 உடன் பயணிகளுக்கு தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்குகின்றது. தனது முக்கிய குறிக்கோளான பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்கு பாதுகாப்பானதும், விசுவாசமுடைளதுமான குழைத்த நேரத்திற்கு பயனிக்கும் சிக்கனமானதும் , வினை திறன் மிக்கதுமான புகையிரத போக்குவரத்து சேவையை வழங்குதலும் சூழல் பற்றுள்ளதும் சிக்கனதுமான வினைத் திறன் மிக்க சேவையை வழங்குவதற்கு தனது பாரிய அர்ப்பனிப்புடன் செயல் படுகின்றது. 2020ம் வருடத்திலும் பல்வேறு தடைகளுக்கும் சவால்களுக்கும் மத்தியிலும் தனது சேவையை தொடராக கொண்டு செல்ல முடிந்துள்ளது.

உலகத்தையே ஆட்கொண்ட கொரோனா தொற்றின் தாக்கம் இலங்கையிலும் காணப்பட்டதுடன், 2020 மார்ச்சு மாதத்திலிருந்து ஏப்றல், மே, ஜான் மாதம் வரை நாடு அடிக்கடி முடக்கப்பட்டது. அதே போன்று சகல புகையிரத போக்குவரத்து தடவைகளும் மட்டுப்படுத்தப்பட்டதுடன், ஜுலை,ஆகஸ்ட், செப்டம்பர், ஒக்டோபர், மாதங்களில் மட்டுப்படுத்தப்பட்ட நிலைமையின் கீழ் புகையிரத போக்குவரத்து மேற் கொள்ளப்பட்டதுடன், மீண்டும் ஒக்டோபர், நவம்பர், திசம்பர், மாதங்களில் அடிக்கடி நாட்டின் வலையங்கள் வகுக்கப்பட்டு முடக்கப்பட்டதால் புகையிரத போக்குவரத்தும் இடைநிறுத்தப்பட்டது. அதன் கீழ் மிகவும் குறைந்த புகையிரத தடவைகள் போக்குவரத்தில் இணைக்கப்பட்டது. அதே போன்று சிறத்த சுகாதார வழிகாட்டலின் கீழ் பயணிகள் போக்குவரத்து மேற்

கொள்ளப்பட்டதுடன், புகையிரதத்தின் பயனித்த பயனிகள் தொகையும் மிகவும் குறைந்து காணப்பட்டது. இக் கொரோனா நிலைமை 2020ம் வருடத்தில் பயணிகள் தொகை மற்றும் வருமானம் குறைந்தமைக்கு மிகவும் முக்கியமானதொரு காரணமாகும்.

இவ்வாறான பல்வேறுபட்ட தடைகளின் கீழும் பயணிகளுக்காக வேண்டி வினைத் திறன் மிக்கதும் வசதியுடையதுமான புகையிரத சேவையை வழங்குவதற்காக பல்வேறுபட்ட செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டது. அதன் கீழ் சீனா மற்றும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன புகையிரதங்கள துர்ரப் பயண சேவைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதுடன் புதிய புகையிரதங்களை அறிமுகப்படுத்தல் மூலம் பொதுப் பயணிகளின் போக்குவரத்து தேவையை வழங்குவதற்கு இலங்கை புகையிரத திணைக்களம் திடமாக செயற்பட்டு செயலாற்றியது.

நோக்கு

இலங்கையில் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தில் மிகவும் விசுவாசமுள்ள போக்குவரத்து வழங்குனராக திகழ்தல்.

இலட்சியம்


பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்காக பாதுகாப்பானதும், விசுவாசமுள்ளதும் வினைத்திறன் மிக்கதுமான புகையிரத சேவையை வழங்குதல்.

நோக்கம்

- புகையிரத பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து பிரிவுகளின் பங்களிப்பை மேம்படுத்தல்.
- புகையிரத இயக்க செயற்பாடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- பயணிகள் புகையிரத சேவையின் வசதிகளை மேம்படுத்தல்.
- புகையிரத சேவையாளர்களினதும் வளங்கள் பிரயோகத்தினதும் திறனை மேம்படுத்தல்.
- புகையிரத வருமானத்தை கூட்டிக் கொள்ளல்
- மணித வளத்தை அபிலிருத்தி செய்தல்.
- புகையிரத உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

1.3 பிரதான விடயங்கள்

- பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளை செயற்படுத்தல்
- பொருட்கள் போக்குவரத்தை மேற் கொள்ளல்.
- விஷேட பயணிகள் புகையிரத சேவையை நடைமுறைப்படுத்தல்.


GENARAL MANAGER RAILWAY
A.G.M (A)
DGM
D(A)
LGO
ADA
A.G.M. (M)
A.G.M. (T)
CEM
CEMO
DGM(T)
DEME
DEM
DEMO
DCET
SEME
SEM
EE
EM
ATE
ATM
EM
ET
A.G.M. (I)
CE(W)
DEBU
DEBR
DEW
SEW
EW
CM
A.G.M. (O)
CE(S)
DES
SS
SEP
SES
S
EP
ES
DGMT
DGM C
ST
SC
MAR
AST
AC
C.F.O
CA
AC
DEC P&P
SE P&P
E P&P
CIA
D.P
DGMP
SRP
SP
DSRP
DIT
ADE
ADP
ASP
ASRP

Level 1 **G.M.R** –General Manager railway

Level 2 **AGM(A)** – Addl. General Manager(Admin) , **AGM(M)** - Addl. General Manager(Mechanical), **A.G.M. (M)** - Addl. General Manager(Infrastructure), **A**.**G.M. (O**)- Addl. General Manager(Operation), **C.F.O** – Chief Finance officer

Level 3 **DGM**-Deputy General Manager (Admin) , **DGM(T**) - Deputy General Manager (Training & HR) , **CEM** – Chief Engineer (Motive Power), **CME**- Chief Mechanical Engineer, **CE(W)** Chief Engineer (Way & works), **CSTE-** Chief Engineer (Signal & Telecommunication), , **DGM(C**) - Deputy General Manager (Commercial) , **DGMT**- Deputy General Manager (Transport) , **CIA**- Chief Internal Auditor , **CA**- Chief Accountant , SRP- Superintendent(RP) , **DGMP** - Deputy General Manager (Procurement) , **D P** – Director (Planning)

Level 4 **D(A)**-Director (Admin) , **DCET** - Deputy Chief Engineer (Training & HRB), **DEMO** - Deputy Chief Engineer (Motive Power), **DEM**- Deputy Chief Engineer (Mechanical), **DEME** - Deputy Chief Engineer (Electrical) , **DEW** - Deputy Chief Engineer (Way & Works) , **DEBR** - Deputy Chief Engineer (Way & Bridges), **DEBU** - Deputy Chief Engineer (Property Development &Building) , **DES** - Deputy Chief Engineer (Signal & Telecommunication), **SC** – Superintendent Commercial , **ST** – Superintendent Transportation

Level 5 **SEM** – SuperintendentEngineer(Motive Power),**SEME**- SuperintendentEngineer(Mechanical),**SEW** - SuperintendentEngineer(Way & works), **SS** – Surveyor Superintendent,**SES** - SuperintendentEngineer(Signal & Telecommunication), **SEP** -SuperintendentEngineer (Planning Project) , **DSSM** – DeputySuperintendent (Sales & Marketing) ,**DIT** - DeputyDirector (Information Technology) , **DSRP** - DeputySuperintendent (R.P) , **SP** – Superintendent (Procurement)

Level 6 **ADA** – Assistant Director (Admin) / Deputy Director (Admin),**LGO** – Legal Officer , **ET** – Engineer (Training & HRB) , **EM** – Engineer (Motive Power),**ATM** – Asst. Transportation Superintendent (Mechanical) ,**ATE** - Asst. Transportation Superintendent (Energy Conservation) ,**EM** – Engineer (Mechanical), **EE**– Engineer (Electrical) ,**CM** – Chemist & Methodologist ,**EW** – Engineer (Way & Works) , **S** – Surveyor ,**ES** – Engineer (Signaling & Telecommunication),**EP** – Engineer (Planning & Project) , **AC** – Asst. Director / Deputy Director (Cost) ,**AST**– Asst. Superintendent (Transportation / Commercial), **AC** – Accountant , **ADI** – Asst. Director (Information Technology) ,**ASRP**-Asst. Superintendent (R.P), **ASP**– Asst.Superintendent (Procurement), **ADP** – Asst. Director (Planning)

1.4 இலங்கை புகையிரத திணைக்களத்தின் உப திணைக்களம், பிரிவுகள் , மற்றும் அலகுகள் அமையப் பெற்றுள்ள விதம்.

உப திணைக்களம், பிரிவுகள் ,அலகுகள்

#	உப திணைக்களம்Z அலகு	திணைக்களம்Zஉப திணைக்களம்Z அலகுகளின் பிரதானிகள்
01	புகையிரத பொது முகாமையாளர் காரியாலயம்	புகையிரத பொது முகாமையாளர
02	பிரதான இயந்திர பொறியியலாளர் உப திணைக்களம்	பிரதான பொறியியலாளர் (இயந்திரம்)
03	பிரதான பொறியியலாளர் (பாதைZவேலைத்தளம்) உப திணைக்களம்	பிரதான பொறியியலாளர் (பாதைZவேலைத்தளம்)
04	பிரதான பொறியியலாளர் (இயக்க வலு) உப திணைக்களம்	பிரதான பொறியியலாளர் (இயக்க வலு)
05	பிரதான பொறியியலாளர் (சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு) உப திணைக்களம்	பிரதான பொறியியலாளர் (சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு)
06	பிரதான கணக்காளர் உப திணைக்களம்	பிரதான நிதி உத்தியோகத்தர்
07	வாணிப உப திணைக்களம்	பிரதி முகாமையாளர் (வாணிபம்)
08	புகையிரத களஞ்சிய உப திணைக்களம்	பிரதி முகாமையாளர் (கொள்வனவு)
09	போக்குவரத்து உப திணைக்களம்	பிரதி முகாமையாளர் (இயக்கம்)
10	இலங்கை புகையிரத பாதுகாப்பு சேவை	பாதுகாப்பு அதிகாரி
11	இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்	பிரதி முகாமையாளர் (பயிற்சி மற்றும் மணித வளம்)
12	பிரதான ஆகுசெலவு உத்தியோகத்தர் காரியாலயம்	பிரதான ஆகு செலவு உத்தியோகத்தர்
13	திட்டமிடல் பகுதி	பணிப்பாளர் (திட்டமிடல்)
14	தரவுகள் ஒருங்கினைப்பு அலகு	முகாமையாளர் தரவுகள் ஒருங்கினைப்பு

அட்டவணை இல 01

புகையிரத பாதை கட்டமைப்பு

பாதை	தூரம் கி.மீ	புகையிரத நிலைய எண்ணிக்கை	உப புகையிரத நிலைய எண்ணிக்கை	புகையிரத தரிப்பிடம்
கரையோர பாதை (கொழும்பு கோட்டையிலிருந்து பெலிஅத்த வரை)	186	41	33	0
பிரதான பாதை (கொழும்பு கோட்டை - பதுளை வரை)	292.38	45	33	26
மாத்தளை பாதை (பேராதெனிய - மாத்தளை வரை)	33.75	06	06	12
புத்தளம் பாதை (ராகம - புத்தளம் வரை)	119.57	19	25	0
புத்தளம் அருவக்காடு பாதை	37.00	01		
களனிவெளி பாதை (மருதானை - அவிஸ்ஸாவெல வரை)	59.27	11	19	7
துறைமுக பாதை	7.00	01	-	-
கொலன்னாவ பாதை	3.18	01	-	-
வடக்கு பாதை (பொல்கஹவெல – கங்கேசன்துறை)	339.47	31	26	17
தலை மன்னார் பாதை (மதவச்சி - தலை மன்னார் பியர்)	106.06	07	04	0
மிஹிந்தளை பாதை	13.50	01	0	02
மட்டக்களப்பு பாதை (மாஹோ – மட்டக்களப்பு	211.11	14	17	05
திருகோனமலை பாதை (கல்ஓயா – திருகோனமலை)	70.23	04	02	02
மொத்தம்	**1,478.52**	**182**	**165**	**71**

அட்டவணை இல 02

1.6 திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனம் நிதியம்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் கீழ் வேறு நிறுவனங்களோ நிதியங்களோ இல்லை

1.7 வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப் பெறும் கருத்திட்டங்களின் தகவல்கள்

வெளிநாட்டு உதவி கிடைக்கும் கருத்திட்டம்

	கருத்திட்டத்தின் பெயர்	கருத்திட்டத்தின் மதிப்பீட்டு செலவு அ.டொ. ரூபா.மி	கருத்திட்டத்தின் காலவெல்லை	விபரம்
01	பயணிகள் பெட்டி 160 கொள்வனவு செய்தல் (இந்திய கடண் உதவி)	86.000	2018.09.07 2020.12.07 (மாதம் 27)	முதலாவது 10 பெட்டிகள் 2021 ஏப்றல் மாதம் இலங்கைக்கு கொண்டுவர பட உள்ளது
02	புகையிரத என்ஞின் 12 கொள்வனவு செய்தல் (USD)	48.67		கருத்திட்டம் செயற்பாட்டிள் உள்ளது
03	மலைநாட்டு புகையிரத பாதைக்காக வேண்டி பவரசெட் 09 கொள்வனவு செய்தல் (சீனா)	93.86	2018 செப்டம்பர் - 2020 மே (மாதம் 20)	கருத்திட்டம் செயற்பாட்டிள் உள்ளது
04	போல்கஹவெல – குரநாகல் இரட்டை பாதையை நிர்மானித்தல் (21.45 Km)	52.00	2 வருடங்கள்	இந்திய கடண் உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட உள்ளது
05	மாஹோ – ஓமந்தை புகையிரத பாதை புனரமைப்பு (129.77 Km)	91.268	3 வருடங்கள்	கருத்திட்டம் செயற்பாட்டிள் உள்ளது

அட்டவணை இல 03

02ம் அத்தியாயம்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் முன்னேற்றமும் முன்நோக்கும் .....

புகையிரத போக்குவரத்து வினைத் திறன் மிக்க பாதுகாப்பானதும், சிக்கனமானதும் சூழல் பற்றுள்ள போக்குவரத்து வழிமுறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் பயணிகள் போக்குவரத்து மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்கு பங்களிப்பு செய்யும் பிரதான போக்குவரத்து வழிமுறை பங்குதாரராக இலங்கை புகையிரத சேவை போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. தற் காலத்தில் பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளில் கூடிய கருசனையுடன் செயற்படும் இலங்கை புகையிரத சேவை காரியால சேவை, தூர பிரதேச சேவை, நகர்சேவை, விஷேட உல்லாச பயன மற்றும் மத விழா கால சேவை போன்றவற்றை மேற் கொண்டு வருகின்றது. இலங்கை பொருளாதாரத்தின் உள் நாட்டு மொத்த உற்பத்தியின் சேவை பிரிவிற்கு ஒத்துழைப்பாக பங்களிப்பை வழங்கி பல்வேறு சவால்களுக்கும் பிரச்சனைகளுக்கும் மத்தியில் மிகவும் வினைத்திறன் மிக்க புகையிரத சேவையை வழங்கும் நோக்குடன் தொடரான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

2020ம் வருடத்தின் ஆரம்ப கட்டத்திலிருந்து தோன்றிய கொவிட் வைரஸ் நிலைமையிலும் இலங்கை புகையிரத திணைக்களம் சகல புகையிரத இயக்க நடவடிக்கைகளிலும் மற்றும் நாளாந்த செயற்பாடுகளிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தும் அவ்வாறான சவால்கள் மற்றும் பிரச்சணைகளுக்கு மத்தியிலும் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக உச்ச பங்களிப்பை வழங்க இலங்கை புகையிரத சேவை தொடரான உழைப்பில் ஈடுபட்டது.

2020ம் வருடத்தில் நிலவிய நிலைமை அவ்வாறிருந்தும், நாளாந்தம் பொதுவாக புகையிரத போக்குவரத்து தடவை 390 அளவிலும், அதன் மூலம் நான்கு இலட்சம் பயணிகள் பயணித்ததுடன், பொருட்கள் போக்குவரத்து மூன்று தடவையும் எரிபொருள் ஏற்றியிறக்கல் 08 தடவையுமாக புகையிரத இயக்கச் செயற்பாடு மேற் கொள்ளப்பட்டது. 2019ம் வருடத்துடன் ஒப்பிடும் போது புகையிரத போக்குவரத்து தடவை 41% வீதத்தினால் குறைந்து காணப்படுவதுடன் அதற்கான பிரதான காரணம் நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் நிலைமை காரணமாக புகையிரதங்கள் பல இரத்துச் செய்யப்பட்டமையாகும். வருடத்திற்குள் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தில் சாதகமான நிலைமையை எதிர்பார்த்து இந்திய கடண் உதவியின் கீழ் புகையிரத என்ஜின் 10 உம், பவர்செட் 06 உம், பயணிகள் பெட்டி 160உம், எரிபொருள் தாங்கி 30 உம், கன்டனர் வெகன் 20 உம், கொள்வனவு செய்யும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. மேற் கூறப்பட்ட கொள்வனவோடு மலை நாட்டு பாதையில் புகையிரத போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக வேண்டி பவர் செட் 09 கொள்வனவு செய்ததோடு சேவையில் இருந்து நீக்கப்பட்ட பயணிகள் பெட்டி 200 புனரமைப்பு செய்தல், புகையிரத பாதுகாப்பு கடவை 200 நிறுவுதல், போன்ற நடவடிக்கைகள் புகையிரத சேவையையில் பயணிகளின் நலன் கருதி மேற் கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி கருத்திட்டங்களாகும். மேலுடம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் கொழும்பு புர நகர் புகையிரத சேவையை மேம்படுத்துவதற்காக வேண்டி உன்மை நிலை பற்றி ஆராய்ந்து அக் கருத்திட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன் புகையிரத சேவையின்

அபிவிருத்திக்காக பிரதான திட்டம் வகுக்கப்படலும் (Railway Master Plan) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

மேலும் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தின சாதக தன்மையை மேலும் மேம்படுத்துவதற்காக வேண்டி மாஹோ – ஓமந்தை வரையிலான புகையிரத பாதையை புனரமைப்பு செய்தல் நடவடிக்கை புகையிரத அபிவிருத்திக்காக 2020ம் வருடத்தில் மேற் கொள்ளப்பட்ட பிரதான கருத்திட்டமாகும்.

கரையோர புகையிரத பாதையில் தெற்கு பயாகலவிலிருந்து அலுத்கமை வரையில் புகையிரத இரட்டைப் பாதைக்கான ஆரம்ப கட்ட செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டதும், புத்தளம் பாதையில் குரன- நீர்கொழும்புக்கிடையில் புகையிரத இரட்டைப் பாதை அமைப்பு தற்போது மேற் கொள்ளப்படுவதுடன் அது 2021ம் வருடத்தில் முடிவு செய்ய பட உள்ளது. இதற்கு மேலதிகமாக புகையிரத என்ஜின் 10 இறக்குமதி செய்யப்பட்டு போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மலை நாட்டு புகையிரத சேவைக்காக சீனாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பவரசெட் 09 போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

2020ம் வருடத்தில் பயணிகள் மில்லியன் 65.08 தொகையினர் பயணித்துள்ளதுடன், பயணிகள் கிலோ மீற்றர் 3905.55 ஆன அளவு பயணம் செய்யப்பட்டுள்ளது. அதே போன்று பொருட்கள் டொன் மில்லியன் 1.78 ஏற்றியிறக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அது பொருட்கள் கிலோ மீற்றல் டொன் 114.37 வாக போக்குவரத்து செய்யப்பட்டு இலங்கை புகையிரத சேவை தனது பங்களிப்பை வழங்கியுள்ளது. மேலும் வருடத்தின் முழு வருமானம் 42.20% வீதத்தினால் குறைந்துள்ளதுடன் அதில் பயணிகள் பிரவேசப்பத்திர வருமாணம் 45% னாலும் குறைந்துள்ளது.

இவ் வருடத்தில் வருடம் பூராவும் நிலவிய கொரோனா நிலைமை காரணமாக புகையிரத போக்குவரத்து தடவைகள் மட்டுப்படுத்தப்பட வகையில் மேற் கொள்ளப்பட்டது. இதன் காரணமாக புகையிரத சேவைகளை ஆரம்பித்தல் மற்றும் விரிவு படுத்தல் மேற் கொள்ளப்படவில்லை.

கொரோன நிலைமையின் கீலும், பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தை வழங்குவதற்காக புகையிரத பாதைகளில் நிலவிய வேக கட்டுப்பாட்டை குறைத்துக் கொண்டு சேவையாளர் பற்றாக்குறை, நிதி நெருக்கடி, உட்கட்டமைப்பு வசதிகள் விடயம் சம்பந்தமாக உபாயமான முறையில் தீர்வுகளை பெற்று மக்களுக்கு விசுவாசமுள்ளதும், வசதியானதுமான புகையிரத சேவையை வழங்குவதற்காக தொடரான இயக்கச் செயற்பாட்டில் ஈடுபட்டது.

முன் நோக்கு

நடைமுறை அரசாங்கத்தின் போக்குவரத்து கொள்கையின் முக்கிய குறிக்கோளாவது பாதை நெரிசலுக்கு தீர்வை பெற்றுக் கொடுப்பதாகும். அதன் படி பெருந் தெருக்களில் பயணிக்கும் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக புகையிரதத்தை பயன் படுத்தல் பிரதான அபிலாஷையாகும். அதில் **"சௌபாக்கிய தெக்ம"** கொள்கை வெளிப்பாட்டில் புகையிரத உட்கட்டமைப்பு வசதிகளை பெருக்கிக் கொண்டு மிகவும் வினைத்திறன் மிக்கதும் சிக்கனதுமான புகையிரத சேவையை வழங்குதல் பிரதான நோக்கமாகும் அதன் படி புகையிர திணைக்களத்தின் எதிர் கால திட்டமிடல்கள் இந் நோக்கை அடிப்படையாக கொண்டு மேற் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் கீழ் மிகவும் கவரக் கூடியதும் சூழல் பற்றுள்ளதுமான போக்குவரத்து வழிமுறையாக புகையிரத சேவையை மாற்ற கிழுள்ள போற்றத்தக்க அபிவிருத்திகளை மேற் கொள்ள எதிர் பார்க்கப்படுகின்றது.

- வினைத்திறம் மிக்கதும் வசதியானதுமான புகையிரத சேவையை மேற்கொள்ளல்.
- பானந்துறை – கொழும்பு – வெயங்கொடை, ராகம – கட்டுநாயக்க – நீர் கொழும்பு மற்றும் மருதானை – ஹோமாகம போன்ற புகையிரத சேவைகளுக்காக மின்சார புகையிரத கட்டமைப்பை அறிமுகப்படுத்தலும் பொதுவான புகையிரத சேவைகளுக்கு மேலதிகமாக அதி சொகுசு காரியால புகையிரத சேவையை ஆரம்பித்தல்.
- புகையிரத சேவையின் நவீன மயப்படுத்தலின் கீழ் நவீன தொழில் நுட்ப முறையையும் டிஜிட்டல் ஆக்கத்தையும் அறிமுகம் செய்து புகையிரத பிரவேசப்பத்திரம் வழங்குதல் மற்றும் ஆசனம் ஒதுக்கீடு செய்தல் போன்றவற்றுக்கு ஒன்லயின் சேவையையும் ஈ பிரவேசப் பத்திரத்தையும் தன்னியக்க உட்செல்லல் மற்றும் வெளிச் செல்லல் வாயில்களை அமைத்தல்.
- பொருட்கள் போக்குவரத்திற்கு தேவையான புகையிரத என்ஜின்களை இறக்குமதி செய்தல், மற்றும் புகையிரத தட்டுகளை உள் நாட்டிலேயே தயாரித்தல் கொழும்பு,

ஹம்பாந்தோட்டை, திருகோனமலை, காங்கேசன்துறை, போன்ற துறைமுகங்களில் புகையிரதத்தின் மூலம் பொருட்கள் போக்குவரத்திற்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்தல்.

- புகையிரத நிலையங்களோடு இனைந்த பிரதான நகரங்களில் உள்ள புகையிரத காணிகளை பயன்படுத்தி கடைத் தொகுதிகள், நிதிச் சேவை, ஹோட்டல், காரியாலயம், சினிமா கூடம், பொழுதுபோக்கு நியைங்கள், மற்றும் தொடர் மாடி வீட்டு தொகுதி போன்றவற்றை உள்ளடக்கிய வானிப மத்திய நிலையங்களாக மாற்றி புகையிரத சேவையின் வருமானத்தை மேலோங்கச் செய்தல்.

எதிர்கால அபிவிருத்தி கருத்திட்டங்கள்

01. மாஹோ – ஓமந்தை புகையிரத பாதை புனரமைப்பு கருத்திட்டம்.
02. பொல்கஹவெல – குருநாகல் புகையிரத இரட்டை பாதையை அமைத்தல்.
03. குருநாகல் - மாஹோ சந்தி புகையிரத இரட்டைப் பாதையை அமைத்தல்.
04. புத்தளம் புகையிரத பாதையில் கட்டுநாயக்க – குரண வரை புகையிரத இரட்டைப் பாதையை அமைத்தல்
05. பழைய களனி பாலத்தை மீளமைத்தல்.
06. புகையிரத சேவைக்காக பிரதான திட்டத்தை தயாரித்தல்.
07. இலக்ரோனிக் பிரவேசப்பத்திரத்தை அறிமுகம் செய்தல்.
08. பயணிகள் பெட்டிகளை உற்பத்தி செய்தல்.
09. புதிய புகையிரத சமிக்கை கட்டமைப்பை நிர்மானித்தல்.
10. பாதுகாப்பான புகையிரத கடவை கட்டமைப்பை நிர்மானித்தல்.
11. பயணிகள் பெட்டி 200 புனரமைப்பு செய்யும் கருத்திட்டத்தின் இனைப்பாக மேலும் 100 பயணிகள் பெட்டிகளை புனரமைப்பு செய்தல்.
12. தெற்கு – அலுத்கமை வரையில் புகையிரத இரட்டைப் பாதையை அமைத்தல்.
13. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் மேற் கொள்ளப்படும் கொழம்பு புர நகர் புகையிரத கருத்திட்டத்தின் கீழ் களுத்தறை – பொல்கஹவெல இடையில் மின்சார புகையிரத சேவையை ஆரம்பித்தல்.

சவால்கள்

இலங்கை புகையிரத திணைக்களம் முகம் கொடுக்கும் பிரதான சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கிடையில் பிரவேசப்பத்திர கட்டணம் பிரதான இடத்தை வகிக்கின்றது.

அதற்கு மேலதிகமாக மீண்டுவரும் செலவினம் கூடியமை, சேவை பிரச்சினை, நிதி ஒதுக்கீடு மட்டுபடுத்தப்படல், போன்ற சவால்களுக்கும், சிக்கல்களுக்கும் மத்தியிலும் நாளாந்தம் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

நிதி முன்னேற்றம்

2020ம் வருடத்தில் இலங்கை புகையிரத திணைக்களம் சம்பாதித்த வருமானமும், செலவும் சம்பந்தமான தகவல்கள் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2020 வருடத்தில் வருமானம் வகைப்படுத்தல்

#	வருமான வகை	வருமானம் (ரூபா. மில்) 2020
01	பயணிகள்	3,481.53
02	பார்சல மற்றும் தபால்	89.09
03	பொருட்கள் மற்றும் பண்ணை வளம்	364.77
04	வேறு	631.24
மொத்தம்		**4,566.64**

அட்டவணை இல.04

2020 வருடத்தின் செலவு

செலவு வகை	செலவு (ரூபா.மி)
மீண்டுவரும் செலவினம்	14,617.45
மூலதனச் செலவு	34,119.51
மொத்தம்	48,736.96

அட்டவணை இல.05

புகையிரத தொடரணி

இந்திய கடண் உதவியின் கீழ் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எஸ்.13 வகையைச் சார்ந்த பவர்செட் 06 தொகுதிகள் நகர் சேவைக்காக ஈடுபடுத்தப் பட்டுள்ளதுடன், எம்.11 வகையைச் சார்ந்த 10 என்ஜின்கள் பயணிகள் போக்குவரத்திற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக 2020ம் வருட கடைசிப் பகுதியில் மலைநாட்டு புகையிரத சேவைக்காக சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எஸ்.14 வகைகையச் சார்ந்த 09 பவர் செட் தொகுதிகள் மலைநாட்டு போக்குவரத்திற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

2020ம் வருடத்தில் நிலவிய கொரோனா நிலைமையின் கீலும் புகையிரத சேவைக்காக புகையிரத தொடரணி மூலம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறிருந்தும் கொரோனா நிலைமை காரணமான புகையிரத சேவையின் போக்குவரத்து தடவைகள் மட்டுப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக புகையிரத தொடரணியினை முழுமையா பயன்படுத்திக் கொள்ள முடியாமல் போனது. 2020 வருட கடைசியில் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த பொதுவான புகையிரத தொடரணிகளை கீழுள்ளவாறு காட்டலாம்

புகையிரத தொடரணி

இல	வகை	தொகை
01	புகையிரத என்ஞின்	73
02	பவர் செட் Single Rakes Doublr Rakes	 39 18
03	பயணிகள் பெட்டி பெட்டி பவர் செட் பெட்டி	1,487 876 611
04	கெல்	492

அட்டவணை இல.06

பயணிகள் பெட்டி மற்றும் புகையிரத என்ஞின் தொடராக பலுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செய்யப்பட்டதால் 2020ம் வருடத்திற்குள் புகையிரத தொடரணிக்காக சிறிய பலுதுபார்ப்புகள் 26706 உம், பாரிய பலுதுபார்ப்புகள் 2192 உம் மேற் கொள்ளப்பட்டது. மேலும் புனரமைப்பு செய்யப்பட்ட பயணிகள் பெட்டி 23 உம் சேவையில் சேர்த்துக் கொள்ள முடிந்தது.

இதற்கு மேலதிகமாக பாவனையிலிருந்து அகற்றப்பட்ட 200 பயணிகள் பெட்டிகளை புனரமைப்பு செய்யும் கருத்திட்டத்தின கீழ் 2020ம் வருட இறுதிக்குள் பயணிகள் பெட்டி 190 புனரமைப்பு செய்து முடிக்கப்பட்டது. அதில் ரூமேனியன் பெட்டி 138 உம், எஸ்.8 பவர்செட் தொகுதி 52 உம் புனரமைப்பு செய்து போக்குவரத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து

2019ம் வருடாத்தில் 128.48 மில்லியன் பயணிகள் புகையிரதத்தில் பயணித்துள்ளதுடன், 2020ம் வருடத்தில் 65.08 மில்லியன் பயணிகள் பயணம் செய்துள்ளனர். அது 2019ம் வருடத்துடன் ஒப்பிடும் போது 49.34% வீத குறைவை காட்டுகின்றது. இவ்வாறு பயணிகள் குறைவதற்கு பிரதான காரணம் 2020ம் வருடம் பூராகவும் அடிக்கடி நாடு முடக்கப்பட்டதும் மார்ச்சு மாதத்திலிருந்து ஜுன் மாதம் வரை அடிக்கடி நாடு முடக்கப்பட்டதுமே காரணமாகும். அக்காலத்தில் சகல புகையிரதங்களும் இரத்துச் செய்யப்பட்டது. அதே போன்று ஜுலை, ஆகஸ்ட், செப்டம்பர், ஒக்டோபர் மாதங்களில் மட்டுப்படுத்தப்பட்ட முறையில் புகையிர போக்குவரத்து மேற் கொள்ளப்பட்டதுடன், மீண்டும் ஒக்டோபர் நவம்பர், திசம்பர் மாதங்களில் அடிக்கடி நாடு பிரிவு பிரிவாக முடக்கப்பட்டதினாலும் புகையிரத போக்குவரத்து மடடுப்படுத்தப்பட்ட வகையில் சேவையில் ஈடுபட்டது. இந் நிலைமை 2019ம் வருடத்துடன் ஒப்பிடும் போது 2020ம் வருடத்தில் பயணிகள் தொகை 49.34% வீதத்தினாலும் பயணிகள் வருமானம் 45.49% வீதத்தினாலும் பயணினகள் கிலோ மீற்றர் 45.56 % வீதத்தினாலும் குறைந்து காணப்படுகின்றது.

பயணித்த பயணிகள் தொகையும் பயணிகள் வருமானமும்

வருடம்	பயணித்த பயணிகள் தொகை (மி)	பயணிகள் வருமானம் ரூபா.மி	பயணிகள் கி.மீ (மி)
2019	128.48	6,386.96	7,309.56
2020	65.08	3,481.53	3,905.55

அட்டவணை இல.07

பொருட்கள் வருமானமும் ஏற்றியிறக்கப்பட்ட பொருட்களின் அளவும்

வருடம்	பொருட்கள் வருமானம் ரூ.(மி)	பொருட்கள் அளவு டொன். (மி)	டொன் கி.மீ அளவு (மி)
2019	435.02	1.80	115.62
2020	364.77	1.78	114.37

அட்டவணை இல.08

❖ 2020ம் வருடத்தில் பொருட்கள் போக்குவரத்து நடவடிக்கை சம்பந்தமாக கருதும் போது பொருட்கள் போக்குவரத்து வருமானம் 16.14% வீதமும் பொருட்கள் டொன் அளவு 4.81% மும், டொன் கி.மீ அளவு 1.08% அளவும் குறைந்துள்ளது. கொவிட் நிலைமைக்கு மத்தியிலும் எரிபொருள் ஏற்றியிறக்கல் நடவடிக்கை தொடராக மேற் கொள்ளப்பட்டமை இதற்கு காரணமானது.

இயக்க காட்டி

இல	செயல் திறன் காட்டி	2019	2020
01	புகையிரத வருமானம் (ரூ.மி)	7,901.32	3,481.53
02	பயணித்த பயணிகள் தொகை (மி)	128.48	65.08
03	பயணிகள் கி'மீ அளவு (மில்லியன்)	7,309.56	3,905.55
04		1.80	1.78
05	பொருட்கள் டொன் கி.மீ (மி)	115.62	114.37

அட்டவணை இல.09

பொதுவான புகையிரத போக்குவரத்து –

புகையிரத சேவை	திட்டமிட்ட புகையிரத தொகை	பயணித்த புகையிரத தொகை
புர நகர்	50,632	45,623
பிரதேச	21,135	1,8895
தூர மற்றும் நகர சேவை	15,724	14,779
ரயில் பஸ்	2,911	2,063
i.பணிகள்	90,402	81,360
ii.பொருட்கள்	6,806	4,891
மொத்தம்	97,208	86,251

அட்டவணை இல.10

மேலுள்ள அட்டவணை இல 12 ல் காட்டப்பட்டுள்ள தகவல்களின் படி 2020ம் வருடத்திற்குள் போக்குவரத்திற்காக திட்டமிடப்பட்ட பயணிகள் புகையிரத தொகை 90402 வாக காணப்பட்டதுடன், அதில் 81360 ஆன தொகை போக்குவரதட்திவ் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதை விகிதாசாரமாக கருதும் போது 89% மாகும். பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து புகையிரதம் குறைவடைவதற்கு கொவிட் பரவுதல் காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பு மற்றும் நாடு முடக்கப்படல் நிலைமையின் கீழ் புகையிரத போக்குவரத்து மட்டுப்படுத்படல் நேரடியான தாக்கததை ஏற்படுத்தியது.

எரிபொருள் பாவணை

புகையிரத என்ஞின் மற்றும் பவர் செட் தொகுதிகளுக்காக கீழுள்ளவாறு எரிபொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

விபரம்	2019	2020
டீசல் லீற்றல் மில்லியன்	33.92	26.32
ஏரி பொருள் செலவு (ரூ.மி)	4,315.60	3,113.29

அட்டவணை இல.11

2020ம் வருடத்தில் எரிபொருள் பாவணை லீற்றர் மில்லியன் 26.32 ஆவதுடன் அதற்காக வேண்டி ரூபா. மி.3113.29 ஆன தொகையை செலவிட நேர்ந்தது. 2020ம் வருடத்துடன் ஒப்பிடும் போது 2019ம் வருடத்தில் பாவனை செய்த எரிபொருள் லீற்றர் மில்லியன் 7.60 ஆன தொகை குறைந்துள்ளதை காணக் கூடியதாக உள்ளதுடன் இதற்கான பிரதான காரணம் இவ் வருடத்தின் மார்ச்சு மாதத்திலிருந்து ஜுன் மாதம் வரையிலான காலவெல்லையில் நாட்டில் நிலவிய கொரோனா தொற்று காரணமாக நாடு முடக்கப்பட்டமையினால் புகையிரத போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. இருந்தும் ஒக்டோபர் மாதத்திலிருந்து திசம்பர் மாதம் வரையான காலத்தில் புகையிரத போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்ட வகையில் மேற் கொள்ளப்பட்டது.

நிரந்தர பாதை கட்டடைப்பும் கட்டிடங்களும் - அட்டவணை இல 14

நிரந்தர பாதை கட்டமைப்பின் பராமரிப்பு நடவடிக்கைகளும் பலுதுபார்ப்புகளும் தொடராக மேற் கொள்ளப்பட்டதுடன் அதற்காக தன்டவாளம் மீற்றர் 39,143.66 உம், கொங்கிரீட் சில்பர் 36,739 உம், மர சில்பர் குற்றி 57,239 உம் கல் கியூப் 17,117 உம் பயன் படுத்தப்பட்டது.

புகையிரத பாதை பராமரிப்புக்காக பயன்படுத்தப்பட்ட பொருட்கள்

பயன்படுத்திய பொருட்கள்	அளவுகள்
தண்டவாளம் (மீற்றர்)	39,143.66
மர சில்பர் குற்றி	57,239
உருக்கு சில்பர்	477
கொங்கிரீட் சில்பர்	36,739
கல் கியூப்	17,117

அட்டவணை இல.12

புத்தளம் புகையிரத பாதையில் குரனவிலிருந்து நீர் கொழும்பு வரை புகையிரத இரட்டைப் பாதையை அமைக்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்படுவதுடன் மாஹோ - ஓமந்தை புகையிரத பாதையை புனரமைப்பு செய்தல் செயற்பாட்டை ஆரம்பித்தல், பொல்கஹவெலவிலிருந்து குருநாகல் வரை புகையிரத இரட்டைப் பாதையை ஆரம்பித்தலுடன் கண்டி- பேராதெனிய – கடுகன்னாவ பாதையின் ஆரம்ப வேலைகளும் பயாகல தெற்கு

அலுத்கமை வரையிலான இரட்டைப் பாதை அமைத்தலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புகையிரத நிலைய கட்டிட பலுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஒஸ்ரியானு நாட்டு கடண் உதவியின் கீழ் புதிய களனி பாலத்தை அமைக்கும் திட்டத்திற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பட்டுள்ளதுடன் அதன் ஆரம்ப கட்ட வேலைகள் தொடங்கப்பட்டுள்ளது.

2020ம் வருடத்தில் வேக கட்டுப்பாட்டை நீக்கி வினைத்திறன் மிக்க புகையிரத சேவையை மேற் கொள்ள நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இல	பாதை	நீக்கப்பட்ட வேக கட்டுப்பாடு	
		2019	2020
01	மத்திய மாவட்டம்	40	20
02	கீழ் மாவட்டம்	44	14
03	மேல் மாவட்டம்	39	8
04	வடக்கு மாவட்டம்	10	1
05	கீழக்கு மாவட்டம்	80	67
மொத்தம்		213	110

அட்டவணை இல.13

2020ம் வருடத்தில் வேக கட்டுப்பாடு 110 அளவில் நீக்க முடிந்துள்ளதுடன் வேக கட்டுப்பாடு நீக்கப்படுவதன் மூலம் நிலையான வேகத்தின் கீழ் புகையிரத போக்குவரத்தை மேற் கொள்ள முடிவதால் குறித்த நேரத்திற்கு புகையிரதம் பயன முடிவிடத்தை சென்றடையும். அதன் நிமிர்த்தம் மிகவும் வினைத்திறன் மிக்க புகையிரத சேவையை பயணிகளுக்கு வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. 2019ம் வருடத்துடன் ஒப்பிடும் போது 2020ம் வருடத்தில் நீக்கப்பட்ட வேக கட்டுப்பாட்டு அளவில் 103 குறைவாக காணப்படுகின்றது. 2020ம் வருடம் பூராகவும் நிலவிய கொவிட் நிலைமை காரணமாக இவ் வேக கட்டுப்பாடு நீக்கப்படலில் குறைவை உனர்ந்து கொள்ள முடியுமாகும்.

சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்பு

பாதுகாப்பானதும், வினைத்திறன் மிக்கதுமான புகையிரத சேவையை மேற் கொண்டு செல்வதற்காக வேண்டி புகையிரத சமிக்கை கட்டமைப்பின் செயற்பாடு மிகவும் முக்கியமான தொன்றாகும். கி.மீ 1479.51 மன துாரத்தை கொண்ட புகையிரத பாதை கட்டமைப்பின் முழுவதிலும் அமைக்கப்பட்டுள்ள 418 புகையிரத நிலையங்களிலும் அமைக்கப்படடுள்ள புகையிரத சமிக்கை கட்டமைப்பை உரிய முறையில் பராமரித்து சிறந்த செயற்பாட்டு மட்டத்தில் பேனுகை செயதல் சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு உப திணைக்களத்தின் பிரதான கடமையாகும். அதே போன்று தற்போது முழு புகையிரத பாதைகளையும் உள்ளடக்கிய புகையிரத பாதுகாப்பு கடவை கட்டமைப்புகளின் தொகை 700க்கும் கூடுதலாக உள்ளதுடன் அவற்றையும் உரிய முறையில் பராமரித்து உரிய செயற்பாட்டு மட்டத்தில் பேனுகை செய்தலும் மேற் கொள்ளப்படுகின்றது.

சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்பின் சிறந்த பராமரிப்பும் மற்றும் நவீனமயப்படுத்துகை புகையிரத சேவையின் வினை திறனை மேம்படுத்துவதற்காக மிகவும் இன்றியமையாத வொன்றாக காணப்படுகின்றது. வருடம் பூராகவும் கொவிட் வைரஸ் காணப்படாலும் கடந்த வருடங்களைப் போன்று 2020ம் வருடத்திலும் சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்பின் செயற்பாட்டை உயர் மட்டத்தில் மேற் கொள்ள சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு உப திணைக்களம் பாரிய செயற்பாடுகளை மேற் கொண்டுள்ளது.

மேலும் 2020ம் வருடத்தில் சமிக்கை உப திணைக்களத்தில்.

1.பொல்கஹவெலவிலிருந்து மாஹோ சந்தி வரையில் பயன் படுத்தப்பட்ட செமபோன் சமிக்கை கட்டமைப்புக்கு பதிலாக புதிய சமிக்கை கட்டமைப்பை பொருத்துதல்.

2. பொத்துஹெரவிலிருந்து குருநாகல் வரை 2019ம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட புதிய தன்னியக்க ப்ளோக் சமிக்கை நிர்மானித்தல் 2020ம் வருடத்தில் பூரணப்படுத்தப்பட்டது. இதன் மூலம் ஒரு திசையில் புகையிரதத்தை செலுத்தும் போது முன்பிருந்த 18 நிமிடம் 05 நிமிடம் வரை குறைத்துக் கொள்வதற்கு முடிந்துள்ளது.

மஹரகம விலிருந்து நுகேகொடை வரையில் பயன்படுத்தப்பட்ட Tablet முறையை அகற்றி விட்டு தன்னியக்க ப்ளோக் சமிக்கை முறையை நிறுவும் கருத்திட்டம் அமுல் படுத்தப் பட்டது மஹரகம புகையிரத நிலைய இயக்க பணிமனையில் மேற் கொள்ளப்பட்ட சமிக்கை முறைக்கு பதிலாக கணனி தொழில் நுட்பத்துடன் சம்பந்தமுடைய மிகவும் வினைத்திறன் மிக்க சமிக்கை கட்டமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா. மில்லியன் 40 ஆக காணப்படுவதுடன், அதன் மூலம் ரூபா மில்லியன் 300க்கும் அதிகமான தொகையை திணைக்களத்தினால் மிகுதப்படுத்த முடிந்துள்ளது.

அதே போன்று புத்தளம் பாதையில் சீதுவையிலிருந்து பிரிமா பக்கப் பாதையை சம்பந்தப்படுத்தி பாதை சமிக்கையை நவீனமயப்படுத்தல் மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் பயிற்சி ஆட்களினதும் நிதி பற்றாக் குறைக்கும் மத்தியிலும் 2020ம் வருடத்திலும் 637 கிலோ மீற்றர் நீளத்திற்கு மின் மற்றும் இலக்ரோனிக் வர்ண சமிக்கை கட்டமைப்பையும் 800 கிலோ மீற்றர் நீளமுள்ள இயந்திர சமிக்கை கட்டமைப்பை சாதகமாக பராமரித்து வினைத்திறன் மிக்க புகையிரத போக்குவரத்தை மேற் கொள்ள முடிந்துள்ளது. அதே போன்று தற்போது நடைமுறையிலுள்ள 200 புகையிரத பாதை பாதுகாப்பு கட்டமைப்பை நிறுவும் கருத்திட்டத்தின் கீழ் பாதுகாப்பு கட்டமைப்பு 200 அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக 200 புதிய மின் சமிக்கை பாதுகாப்பு கட்டமைப்பை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

வாணிப நடவடிக்கை

புகையிரத திணைக்களத்தின் வருமானத்தை பெருக்கிக் கொள்வதற்காக புகையிரத வாணிப நடவடிக்கை 2020ம் வருடத்திலும் மேற் கொள்ளப்பட்டது. அதன் படி 2020ம் வருடத்திற்குள் புகையிரத வருமான நிலைமையை கூட்டிக் கொள்வதற்காக வேண்டி (பயணிகள் மற்றும் பயணிகள் அல்லாத) கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மேற் கொள்ளப்பட்டது.

புகையிரத திணைக்களதின் வாணிப நடவடிக்கைகளின் போது பொது மக்களுடன் நேரடியாக தொடர்பு ஏற்படுவதுடன் பொது மக்களின் வேண்டு கோளுக்கு இனங்க நிலவிய கொரோனா நிலைமையின் கீழும் புகையிரத போக்குவரத்து மற்றும் இயக்க நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஏதும் ஏற்படாதவாறு திணைக்களத்தின் வளங்களை உச்சளவு பிரயோசனப்படுத்தி கொள்வனவு வழிகாட்டி உபதேசத்தின் படி திணைக்கள வருமானத்தை கூட்டிக் கொள்ள முடிந்துள்ளது.

இதற்கு மேலதிகமாக புகையிரத திணைக்களத்தின் பயணிகள் ஓய்வு அறை மற்றும் உல்லாச விடுதிகளின் வருமானத்தை பெருக்கிக் கொள்ளலும், நுகர்வாளர்களை கவரும் விதத்தில் வசதிகள் வழங்கப்படுவதுடன். அதே போன்று விடுமுறை பங்களாக்களில் வினைத்திறன் மிக்க சேவையை பொது மக்களுக்காக மேற் கொண்டு செல்வதற்கு தேவையான பௌதீக வளங்களும் பெற்றுக் கொடுக்கப்படும். இதற்கு மேலதிகமான புகையிரத பயணிகளுக்கு ஏற்படும் விபத்துக்களின் போது விபத்தின் தன்மைக்கு ஏற்ப நஷ்டயீடு கொடுப்பதற்கும் தேவையான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக

- மட்டக்களப்பிலிருந்து கொழும்பு வரை மணல் ஏற்றியிறக்கல் மேற் கொள்ளப்பட்டது.
- சீனக் குடாவிலிருந்து சீதுவை வரையில் பிரிமா மாவு ஏற்றியிறக்கல் செய்வதற்காக திட்ங்களை வகுத்தல்.
- Q Shop விற்பனை நிலையங்களை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- வனவாசல விலிருந்து புத்தளம் வரை குப்பை ஏற்றியிறக்கலுக்கு திட்டமிடப்பட்:டுள்ளது.
- சீனக் குடாவிலிருந்து பொலன்னறுவை வரையிலும் கொழும்பிலிருந்து பொலன்னறுவை வரையிலும் புகையிரதத்தின் மூலம் உரம் ஏற்றியிறக்க திட்டமிடல்
- நானுஓயாவிலிருந்து கொழும்பு வரை விவசாயப் பொருட்களை புகையிரதத்தின் மூலம் கொண்டு செல்ல திட்டமிடல். போன்ற நடவடிக்கைகள் 2020ம் வருடத்தில் மேற் கொள்ளப்பட்டது.

பயணிகள் வசதிகளும் வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளும்

2020ம் வருடத்தில் புகையிரத நிலைய அபிவிருத்தி செயற்பாட்டின் கீழ் பயணிகளின் வசதிகளை மேம்படுத்துவதற்காக வேண்டி செயற்பாடுகள் பல எடுக்கப்பட்டதுடன் அதில் சில பின்வருமாறு

- வலது குறைந்த பயணிகளுக்காக வேண்டி வசதிகளை அபிவிருத்தி செய்தல் (சக்கர நாற்காலி, வலது குறைந்தவர்கள் பயனிப்பதற்கு வேறான பாதை அமைப்பு, மலசலகூடம் அமைத்தல், வலது குறைந்தோர் பிரவேசப் பாதை அமைத்தல்)
- புகையிரத நிலைய ஓய்வு அறை நவீனமயப்படுத்தலுடன், அவை பயணிகளுக்கு இலகுவாக ஒதுக்கிக் கொள்வதற்கு முறையொன்றை வகுத்தல்.
- புதிய புகையிரத பயணிகள் பாலம், புகையிரத நிலைய மேடைகளை உயர்த்துதல் மற்றும் நீட்டுதல், புகையிரத நிலைய கட்டிட பராமரிப்பு
- புதிய புகையிரத சேவையை அறிமுகம் செய்தல்
